
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
THURSDAY, FEBRUARY 02, 2023

வியாழக்கிழமை பெப்ரவரி 02, 2023 | ஒளி: 08 கதிர்: 200 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## மேலதிக நீரை வெளிவிட முடியாது

மின்சார உற்பத்திக்காக மேலதிக நீரை வெளிவிட முடியாது என மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.
மின்சார உற்பத்திக்கு தேவையான அளவு நீர் மாத்திரம் வழங்கப்படும் என மகாவலி அதிகார சபையின் பிரதி பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
மின் உற்பத்திக்காக மின் உற்பத்தி நிலையங்களுடன் தொடர்புடைய நீர்த்தேக்கங்களில் இருந்து மேலதிக நீரை விடுவிப்பது தொடர்பில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அண்மையில் விடுத்த கோரிக்கைக்கு அமைய கடந்த இரு தினங்கள் மேலதிக நீர் வெளிவிடப்பட்டது. இந்த நடைமுறை நேற்று (01) முதல் அதிகார சபையால் கைவிடப்பட்டுள்ளது.

# முயற்சிக்கு முழு ஆதரவு

## ஜனாதிபதி ரணிலிடம் விக்டோரியா எடுத்துரைப்பு



இலங்கையை வழமை நிலைக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளுக்கு தமது அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என அமெரிக்க அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும், அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்டிற்கும் (Victoria Nuland) இடையிலான கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று (01) முற்பகல் இடம்பெற்றது.

நாடு எதிர்நோக்கும் மிகவும் கடினமான சூழ்நிலையில் அமெரிக்கா வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்கள் தனது நன்றியைத் தெரிவித்தார்.
இதன் போது, சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டதுடன், எழுந்துள்ள பிரச்சினைகளுக்கான அவசரத் தீர்வுக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவளிக்கும் என விக்டோரியா நூலாண்ட் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



## சிறுபான்மை தலைவர்களை ஒன்றாக சந்தித்தார் விக்டோரியா

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான உப இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட், பல்வேறு மட்டங்களில் சந்திப்புகளை நடத்தியிருந்தார்.
அவர், சிறுபான்மை அரசியல் தலைவர்களை ஒன்றாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். அதில், பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எவ்வாறு அமெரிக்கா உதவலாம் என்பது குறித்தும், அதிகார பகிர்வு, நல்லிணக்கம் குறிக்கும் கலந்துரையாடியதாக அறியமுடிகின்றது.

## இன,மத வாதங்களைத் தூண்டும் கோழைகள் எம்மிடம் இல்லை

### கிழக்கு கூட்டங்களில் சஜித் தெரிவிப்பு

இந்த நாட்டை ராஜபக்ஷர்களே அழித்தனர் எனக் குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சித் தலைரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டும் கோழைகள் எம்மிடம் இல்லை என்றார்.
கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள அவர், ஜனவரி 31ஆம் திகதி நடைபெற்ற பல்வேறான கூட்டங்களில் கலந்துகொண்டார்.
சம்மாந்துறையில் இடம்பெற்றக் கூட்டத்தில் பங்கேற்றிருந்த அவர், சம்மாந்துறை மக்கள் மாத்திரமன்றி முழு முஸ்லிம் சமூகமும் இந்த மொட்டுவின்



அற்ப அரசியலால் பெரும் அழுத்தத்துக்கு உள்ளாகினர். இனவாதம், மதவாதம் கொண்டு முஸ்லிம் மக்களின் வாழ்க்கையை சீரழித்தனர்.

தொடர்ச்சி P2

## 11 அரசியல்வாதிகளின் சொத்து விவரங்கள்; இன்று விசாரணை

பா.நிரோஸ்

அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், மனோ கணேசன், வேலுகுமார், அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ் உள்ளிட்ட 11 அரசியல்வாதிகளின் சொத்து விவரங்கள் தொடர்பான மேன்முறையீடு, தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழு முன்பாக இன்று (02) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.
மேற்குறித்த 11 அரசியல்வாதிகளின் சொத்துகள், கல்வித் தகைமைகள், தேர்தலில் போட்டியிட்டபோது தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த ஆவணங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களைகோரி 02.10.2022 அன்று தேர்தல் ஆணைக்குழுவுக்கும்,

தொடர்ச்சி P2

உலகளாவிய காலாந்தர மீளாய்வில்

## காணொளியின் மூலம் இலங்கை பங்கேற்கிறது

உலகளாவிய காலாந்தர மீளாய்வின் 4வது சுழற்சியின் கீழான இலங்கையின் தேசிய அறிக்கையானது, ஜெனீவாவில் நடைபெறவுள்ள அதன் 42வது அமர்வின் போது உலகளாவிய காலாந்தர மீளாய்வுக்கான ஐ.நா செயற்குழுவால் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது. மனித உரிமைகளை மேம்படுத்தி, தமது



மனித உரிமை சார்ந்த கடமைகளை நிறைவேற்றுவதற்காக ஒவ்வோர்

தொடர்ச்சி P2

## உயிரைக் கொடுத்து 13 ஐ தடுப்போம்

### விமல் அணி சூளுரை



13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சியை எதிர்ப்பதாக விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.
தேசபக்தியுள்ள மக்கள், தங்கள் உயிரைக் கொடுத்தாவது இதுபோன்ற திட்டங்களைத் தோற்கடிக்கத் தயாராக உள்ளனர் என்றும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மலையக மக்கள் மீதான பாகுபாடுகளை அகற்றுமாறு

### இலங்கை திருச்சபை அறிக்கை

Church of Ceylon

மலையக மக்கள் நாட்டுக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு இலங்கை திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் ஆகிய திருச்சபைகள் இணைந்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.
இலங்கை கொலனித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் வேளையில், மலையக மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான பாகுபாடுகளை அகற்றுமாறு அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சட்டவிரோத உத்தரவுக்கு 'திசைகாட்டி' அசையாது



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டவிரோத உத்தரவுகளுக்கு தேசிய மக்கள் சக்தி கீழ்படியாது என தெரிவிக்கும் அதன் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, யார் என்ன கூறினாலும் மார்ச் 09ஆம் திகதி தேர்தல் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.
நான் ஒரு ஹிட்லர் போன்றவன். எனவே, வீதிக்கு இறங்கி போராடுவதற்கு இடமளிக்கப்போவதில்லை

தொடர்ச்சி P2

## இராஜினாமா செய்த சார்ள்ஸ் கையொப்பம்




தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்புரிமையிலிருந்து இராஜினாமா செய்துள்ளதாக தெரிவித்த திருமதி ஜி.எஸ்.எம். சார்ள்ஸ், நேற்று (01) வெளியான உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பமிட்டுள்ளார்.
தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்த அவர்,

தொடர்ச்சி P2


## ரணிலின் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும்

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்படுத்த ஒருபோதும் இடமளிக்கக்கூடாதென தெரிவிக்கும் பேராசிரியர் அகலகட சிரி சுமண தேரர், பொலிஸ், இராணுவத்துக்குப் பயப்படாது ரணிலின் இனவாத எண்ணக்கருவை தோற்கடிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

# உயிர்த்தஞாயிறு தாக்குதல்கள்: ஒருவரைத் தவிர 64 பேருக்கு பிணை



கனகராசா சரவணன்

உயிர்த்தஞாயிறு தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 65 பேரையும் மே 30 திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் ஒருவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல், செவ்வாய்க்கிழமை (31) உத்தரவிட்டார்.
21.4.2019 உயிர்த்தஞாயிறன்று இடம் பெற்ற தாக்குதல்களின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை, நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்றும் சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள், சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 66 பேர் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

## காணிக்கு தேசிய கொள்கை

நாட்டுக்கென காணி தொடர்பான தேசிய கொள்கை ஒன்றை வகுக்கப்போவதாக கூறும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, நாட்டைப் பிளவுபடுத்தவோ அல்லது மாகாணங்களுக்குக் காணிகளை வழங்கவோ எதிர்பார்க்கவில்லை எனவும் தெரிவித்தார்.
21ஆவது திருத்தச் சட்டத்தின்படி, தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. தேர்தலை நடத்துவது தொடர்பில் அரசாங்கம் என்கிற ரீதியில் எந்தவிதமான தலையீடுகளை நாம் மேற்கொள்ளப் போவதில்லை. மாறாக தேர்தலை நடத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்புகளையும் நாம் வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# முயற்சிக்கு முழு ஆதரவு

தொடர்பில் சிறிய கட்சிகளுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி தெளிவுபடுத்தினார்.
அதிகரித்து வரும் போதைப்பொருள் வர்த்தகத்திற்கு எதிராக தொடர்ச்சியாக எடுக்கும் முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டன, அமெரிக்கா அதற்கு தனது முழு ஆதரவையும் வழங்கும் என்றும் வலியுறுத்தப்பட்டது.
இதேவேளை, தனது விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்புவதற்கு முன்னர், கொழும்பில் ஊடகவியலாளர்களை, அமெரிக்க அரசியல்

விவகாரங்களுக்கான உப இராஜாங்க செயலாளர் விக்டோரியா நூலண்ட் சந்தித்தார்.

அந்த சந்திப்பில், இலங்கை தனது ஜனநாயகம், நல்லிணக்கம், ஆட்சிமுறை ஆகியவற்றை வலுப்படுத்துவதற்குரிய முக்கிய தருணம் இதுவென்றும் தெரிவித்தார்.

இலங்கை 75ஆவது சுதந்திரதினத்தை கொண்டாடும் இத்தருணத்தில் தான் இலங்கைக்கு மேற்கொண்டுள்ள விஜயமானது,இலங்கை வரலாற்றில் முக்கிய தருணம் என்றும் கூறிய அவர், இலங்கையிலுள்ள 850 அரசாங்க பாடசாலைகளிலுள்ள 96,000 மாணவர்களின் உணவு தேவைக்காக 30 மில்லியன் மெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையக மக்கள் மீதான பாகுபாடுகளை அகற்றுமாறு

## இலங்கை திருச்சபை அறிக்கை

இதன் மூலம் உண்மையில் பல இன, பல மதங்களைக் கொண்ட இலங்கையின் சமமான குடிமக்களாக மலைய மக்களை மாற்ற முடியும் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை திருச்சபை, இலங்கை மெதடிஸ்ட் திருச்சபை, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தினர் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ளனர்.

# இன,மத வாதங்களைத் தூண்டும்

நாட்டை அழித்த ராஜபக்ஷர்களே இந்த இனவாதத்தையும் மதவாதத்தையும் உருவாக்கினார்கள் என்றார்.

இனவாதத்தாலும் மதவாதத்தாலும் ராஜபக்ஷர்கள் நாட்டை அழித்த போதிலும்,ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய, ஒன்றிணைந்த ஒரு நாட்டை உருவாக்க பாடுபடுகிறது எனவும்,நீங்களும் நானும் ஒரு தாய் தந்தையின் பிள்ளைகளாக பணியாற்றும் நாட்டை உருவாக்கவே செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித்தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் இந்நாட்டில் இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டுவது ஒரு தண்டனைக்குரிய குற்றச் செயலாக மாற்றி, இந்த கொடூரமான இனவாதத்தையும் மதவாதத்மையும் எமதுநாட்டிலிருந்து இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கொவிட் தொற்றில் மரணமடைந்தவர்களை தகனம் செய்வதா? அல்லது அடக்கம் செய்வதா? என்ற பிரச்சினை வந்தபோது அனைத்து தலைவர்களும் கோழைகள் போல் செயல்பட்டனர் எனவும்,எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் அதற்கு எதிராக தான் குரல் எழுப்பியதாகவும் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் இடம்பெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில்,

ஐக்கிய மக்கள் சக்தி ஒவ்வோர் இனத்திற்கும், மதத்திற்கும்,மனித நேயத்துக்குமாய் ஒன்றாய் முன்நிற்பதாகவும் தெரிவித்தார்.

ஆனாலும்,சில பாராளுமன்ற உறுப்பினர்களும் கூட மொட்டுவுடன் இணைந்து இனவாதத்தையும்மதவாதத்தையும் தூண்டும் வகையில் செயற்பட்டனர் எனவும்,ஐக்கிய மக்கள் சக்தியில் இவ்வாறானகோழைத்தனமான பாராளுமன்ற உறுப்பினர்கள் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம் எனவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தூய சிங்கள பௌத்தம் ஒருபோதும் இனவாதம் மற்றும் மதவாதத்தின் அடிப்படையில் செயற்படாது எனவும்,புத்தர் கூட அனைத்து உயிரினங்களுக்கும் நலவையே நாடி நல்லதையே போதித்தார் எனவும், அந்தக்கோட்பாட்டைப் பின்பற்றும் ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்களும் அனைத்து இனங்களுக்காகவும்மதங்களுக்காகவும் சரிசமமாக முன்நிற்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# II அரசியல்வாதிகளின்...

நுவரெலியா, கண்டி, பதுளை, கொழும்பு மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கும் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விண்ணப்பம் அனுப்பப்பட்டிருந்தது.

இந்த விண்ணப்பத்துக்கு பதில் வழங்கியிருந்த நுவரெலியா மாவட்ட தேர்தல் அலுவலகம், "சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வழங்குவதாக இருந்தால் சம்மந்தப்பட்ட நபர்களின் அனுமதியைப் பெற வேண்டும். இவ்வாறு அனுமதி கோரப்பட்டபோது, தகவல்களை வழங்குவதற்கு அவர்கள் எதிர்ப்பை தெரிவித்துள்ளனர். எனவே, சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான தகவல்களை வழங்க முடியாது." என பதில் வழங்கியிருந்தது.

இந்த பதிலுக்கு எதிராக RTI சட்டத்தின் கீழ் தேர்தல் அலுவலகத்துக்கு மேன்முறையீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், நுவெரலியா தேர்தல் அலுவலகம் வழங்கிய பதிலையே தேர்தல் ஆணைக்குழுவும் வழங்கியிருந்தது.

இதற்கு எதிராக தகவலறியும் உரிமைக்கான ஆணைக்குழுவில் செய்யப்பட்டிருந்த மேன்முறையீடே இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

இதன்படி, தேர்தல் ஆணைக்குழுவின் தகவல் அதிகாரியை ஆணைக்குழு முன்பாக முன்னிலையாகுமாறு ஆணைக்குழு பணித்துள்ளது.

# ரணிலின் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும்

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், வடக்கு, கிழக்குக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சிகளை நாட்டு குடிமக்கள் என்ற ரீதியிலும், மாநாயக்க தேரர்கள் என்ற ரீதியிலும் நாம் தோற்கடிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்திலேயே அதிகளவில் மக்கள் தற்கொலை செய்துக்கொள்கிறார்கள். அந்த மக்களின் வாழ்க்கையும், பொருளாதார நிலைமை யும் முற்றாக சரிந்துள்ளது. இப்பிரச்சினைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்க்காது, 13ஆவது திருத்தச் சட்டத்தை அமல்ப்படுத்தப் பார்க்கிறார். இது அம்மக்களின் தீர்வாக அமையாது.

எனவே, 13ஆவது திருத்தச் சட்டம் அம்மக்களுக்கு தீர்வாக அமையாது. எனவே, ரணிலின் இதுபோன்ற வன்முறையானச் செயற்பாடுகளால் நாட்டுக்குப் பெரும் ஆபத்து இருப்பதாகவும் எச்சரித்தார்.

இராணுவத்துக்கும் பொலிஸாருக்கும் பயப்படாது, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமல்ப்படுத்துவதை மீள திரும்பப் பெறும் வரையில் இந்நாட்டின் தேசிய அமைப்புகள் அனைத்தும் ஒன்றிணைந்து, ரணிலின் இனவாத எண்ணக்கருவை தோற்கடிக்கும் வரையில் போராட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

# காணொளியின் மூலம் இலங்கை பங்கேற்கிறது

அரசும் தேசிய அளவில் முன்னெடுத்த நடவடிக்கைகளை அறிவிப்பதற்கான வாய்ப்பை வழங்கும் வகையில், அரசுகளால் இயக்கப்படும் தன்னார்வமயமான சக மீளாய்வு செயன்முறையாக, 2006ஆம் ஆண்டில் உலகளாவிய காலாந்தர மீளாய்வு ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையால் நிறுவப்பட்டது.

உலகளாவிய காலாந்தர மீளாய்வின் போது, குறிப்பிட்ட தெரிவு அல்லது பாகுபாடு இன்றி ஐ.நா.வின் அனைத்து 193 உறுப்பு நாடுகளும் மீளாய்வு செய்யப்படுகின்றன. இது காலாந்தர ரீதியாக, ஒவ்வொரு நான்கரை ஆண்டுகளுக்கும் ஒருமுறை மேற்கொள்ளப்படுகின்றது.
ஒவ்வொரு ஆண்டும் 3 அமர்வுகள் நடாத்தப்படுவதுடன், ஒரு அமர்வில் 14 நாடுகள் மீளாய்வு செய்யப்படுகின்றன.
ஐ.நா.வின் ஒவ்வோர் உறுப்பு நாடும் 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீளாய்வு செய்யப்படுகின்றன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

2008 (முதலாவது), 2012 (இரண்டாவது) மற்றும் 2017 (மூன்றாவது) ஆகிய உலகளாவிய காலாந்தர மீளாய்வின் 3 சுழற்சிகளில் இலங்கை உட்பட அனைத்து ஐ.நா. உறுப்பு நாடுகளும் பங்கேற்றுள்ளன.

உலகளாவிய காலாந்தர மீளாய்வின் 4வது சுழற்சி 2022 நவம்பர் மாதத்தில் தொடங்கியதுடன், இலங்கையின் நான்காவது உலகளாவிய காலாந்தர மீளாய்வானது, 2023 பெப்ரவரி 01ஆந் திகதி ஜெனீவாவில் உள்ள உலகளாவிய காலாந்தர மீளாய்வு பணிக்குழுவின் 42வது அமர்வின் போது எடுத்துக்கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஜனவரி 23 முதல் பிப்ரவரி 03 வரையிலான காலப்பகுதியில், உலகளாவிய காலாந்தர மீளாய்வின் 4வது சுழற்சியின் கீழ், 42வது பணிக்குழுவில் ஆர்ஜென்டினா, பெனின், செக்கியா, காபோன், கானா, குவாத்தமாலா, ஜப்பான், பாகிஸ்தான், பெரு, கொரியக் குடியரசு, சுவிட்சர்லாந்து மற்றும் சம்பியா ஆகிய நாடுகளும் மீளாய்வு செய்யப்படவுள்ளன:

உலகளாவிய காலாந்தர மீளாய்வின் 4வது சுழற்சியின் கீழ் இலங்கையின் தேசிய அறிக்கை 2022 டிசெம்பர் 22ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுடன், கடந்த நவம்பர் 2017 இல் மேற்கொள்ளப்பட்ட உலகளாவிய காலாந்தர மீளாய்வுக்குப் பின்னர், நாங்கள் தானாக முன்வந்து ஏற்றுக்கொண்ட மனித உரிமைக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த சுய மதிப்பீட்டை வழங்குகின்றது.

இந்த ஆண்டு மீளாய்வானது, கலப்பின வடிவத்தில் நடைபெறவுள்ளது. இதே காலகட்டத்தில் 75வது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நடைபெறவுள்ளதன் காரணமாக, இலங்கையின் பிரதிநிதிகள் குழுவானது வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் தலைமையில் முன் பதிவு செய்யப்பட்ட காணொளி அறிக்கையின் மூலம் பங்கேற்க உள்ளது.

# உயிரைக் கொடுத்து 13 யை தடுப்போம்

## விமல் அணி சூளுரை

ஒற்றையாட்சி அந்தஸ்தை இல்லாதொழிக்கும் ஜனாதிபதியின் இத்தகைய நடவடிக்கைக்கு எதிராக பிரசாரத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அக்கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை 13வது திருத்தம் தொடர்பான தமது நிலைப்பாட்டை வெளியிடுமாறு, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் மஹிந்த ராஜபக்ஷவிடம் தேசிய சுதந்திர முன்னணி கேட்டுக்கொண்டுள்ளது.

# இராஜினாமா செய்த சார்ள்ஸ் கையொப்பம்

அன்று முதல் தேர்தல் ஆணைக்குழுவிற்கு வரவில்லை என்றும், அந்த நடவடிக்கைகளில் பங்கேற்கவில்லை என்றும் தகவல் வெளியானது. எனினும், அவருடைய இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ள வில்லை என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், நேற்று (01) வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் அவர் கையொப்பமிட்டுள்ளதால், ஆணைக்குழுவின் உறுப்பினராக தொடர்ந்தும் அவர் இருப்பார் என அறியமுடிகின்றது.

# சட்டவிரோத உத்தரவுக்கு திசைக்காட்டி அசையாது

என ரணில் முன்னர் கூறியிருந்தார். இப்போது தேர்தலை நடத்துவதற்கு இடமளிக்க மாட்டேன் என்கிறார். மக்களின் எதிர்ப்பை வீதிக்கு இறங்கி வெளிப்படுத்தவும், தேர்தல் ஊடாக வெளிப்படுத்தவும் ரணில் இடமளிப்பதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சட்டவிரோத உத்தரவுகளுக்கு யார் கீழ்படிந்தாலும், திசைக்காட்டி (தேசிய மக்கள் சக்தியின் சின்னம்) கீழ்படியாது எனவும் தெரிவித்தார்.

யார் என்ன கூறினாலும் மார்ச் 09ஆம் திகதி தேர்தல் நடைபெறும். சந்திரிகாவை மாற்றி மஹிந்தவைக் கொண்டுவந்தார்கள். மஹிந்தவை மாற்ற மைத்திரி - ரணிலைக் கொண்டுவந்தார்கள். மைத்திரி - ரணிலை மாற்றுவதற்கு கோட்டாவைக் கொண்டுவந்தார்கள். ஆட்சி மாற்றங்களால் பயனில்லை. மாறாக சிஸ்டம் (முறைமை) மாற்றமே வேண்டும் எனவும் அநுர தெரிவித்தார்.

இந்த சிஸ்டம் மாற்றத்துக்கான முதலடியாக மார்ச் 09ஆம் திகதியை நாட்டு மக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மக்களின் சொத்துகளை விற்பனை செய்வதற்குப் பதிலாக மக்களின் சொத்துகளைப் பாதுகாக்கின்றன ஆட்சியாளர்களே நாட்டுக்கு தேவை. இதனை திசைக்காட்டியால் மாத்திரமே செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தான் ஜனாதிபதியானதும் விமான நிலையங்களை மூடுவதாகக் கூறினார். அதாவது, மஹிந்தவை நாட்டை விட்டு தப்பியோட இடமளிக்கப்போவதில்லை என்றார். அவ்வாறு கூறிய மைத்திரியே மஹிந்தவை பிரதமராக்கினார்.

# காணிக்கு தேசியக் கொள்கை

எனவே, தேர்தலை திட்டமிட்ட திகதியில் தேர்தல் ஆணைக்குழு நடத்தும் என நான் நம்புகிறேன். 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எவரும் எதுவும் பேச முடியாது. அது அரசியலமைப்பில் ஒரு பிரிவு. எனினும், அதில் உள்ள காணி, பொலிஸ் அதிகாரங்கள் தொடர்பில் பேசுகிறார்கள். உண்மையில் எமது நாட்டுக்கென காணிக் கொள்கை ஒன்று இல்லை.

எனவே, தேசிய காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு ஊடாக காணிக் கொள்கையை உருவாக்க எதிர்பார்க்கிறோம். இதனூடாக நாட்டைப் பிளவுப்படுத்தவோ, மாகாணங்களுக்கு காணிகளை பகிர்ந்து வழங்குவதற்கோ எதிர்பார்க்கவில்லை. அவற்றை செய்யவும் முடியாது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

21ஆவது திருத்தச் சட்டம் ஊடாக தேசியப் பொலிஸ் ஆணைக்குழு சுயாதீனமாக இயங்க ஆரம்பித்ததன் பின்னர், பொலிஸாரின் எந்தவொரு அதிகாரங்களும் தேசியப் பொலிஸ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அமையவே மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

# 24 வர்த்தமானிகள் வெளியாகின

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கான வர்த்தமானி அறிவித்தல் வெளிவராமல் இருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில், அந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று (01) வெளியிடப்பட்டது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதம் 09ஆம் திகதி காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளதாக அதில் குறிப்படப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 38 /1/ A சரத்திற்கு அமைவாக, மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகளினால் இந்த அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

24 தேர்தல்கள் மாவட்டங்களுக்கான 24 வர்த்தமானி அறிவித்தல்களே தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளன.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் ஒருவரை தவிர 64 பேருக்கு பிணை

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்குல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இதில் சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய வழக்கில் இருந்து 3 பேரை விடுவித்ததுடன் 63 பேரில் 62 பேர் கட்டம் கட்டமாக பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் குற்றம் சாட்டப்பட்ட 20 நபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.
இந்நிலையில், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு ஜனவர் 31ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் நீதிமன்றில் ஆஜராகிய நிலையில் அவர்களை அடுத்த வழுக்கு தினமான மே 30 ம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறும் உத்தரவிட்ட நீதவான், ஒருவரின் விளக்கமறியலை நீடித்து உத்தரவிட்டார்.

# முதலிகே விடுதலை

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முலிகேவிற்கு எதிராக கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் முன்னெடுக்கப்பட்ட 03 வழக்குகளிலும் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

கோட்டை நீதவான் நீதிமன்றில் குறித்த வழக்குகள் நேற்று(01) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த பிணை உத்தரவு வழங்கப்பட்டதாக சட்டத்தரணி நுவான் போப்பகே தெரிவித்தார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த வசந்த முதலிகேவுக்கு 31ஆம் திகதி பிணை வழங்கப்பட்டது. எனினும், ஏனைய மூன்று வழக்குகள் நிலு வையில் இருந்தமையால் அவர், அன்றையதினம் விடுதலைச் செய்யப்படவில்லை. நேற்றைய தினமே விடுவிக்கப்பட்டார்.



## சிறுத்தையின் உடலம் மீட்பு

பி.கேதீஸ்

நுவரெலியா- பீட்றூ தோட்ட லவர்சிலிப் பிரிவில் கம்பி வலையில் சிக்கிய நிலையில் சிறுத்தையின் உடலம் நேற்று முன்தினம் (31) மாலை மீட்கப்பட்டுள்ளதாக ஹக்கல வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். விலங்குகளை வேட்டையாடுவதற்காக தேயிலை மலையில் அமைக்கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி உயிரிழந்த குறித்த சிறுத்தை 4 வயது மதிக்கத்தக்க ஆண் சிறுத்தை என்றும் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக உயிரிழந்த சிறுத்தையின் உடலம் ரந்தெனிகல கால்நடை வைத்தியப் பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

கவனிப்பாரற்ற நிலையிலுள்ள

# திகன பஸ் தரிப்பிடம்

மொஹொமட் ஆஸிக்

இலங்கையின் துரித அபிவிருத்தியை கருத்தில் கொண்டு, 1980களில் ஆரம்பிக்கப்பட்ட துரித மஹாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட திகன புதிய நகரில் அமைந்துள்ள பஸ் தரிப்பிடம், தற்போது கவனிப்பாரற்ற நிலையில் உள்ளதாக அப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி -மஹியங்கனை வீதியில் பயணிக்கும் மஹியங்கனை, அம்பாறை போன்ற தூர பிரதேசங்களுக்கான பஸ் வண்டிகள் நிறுத்துவதற்காக இந்த பஸ் நிலையம் நிர்மாணிக்கபட்ட போதும், தற்போது அங்கு எவ்வித பஸ்களும் நிறுத்தப்படுவதில்லை என்றும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மக்கள், நகரில் பஸ் தரிப்பிடம் ஒன்று இருந்தும் இல்லாத நிலையில் உள்ளதாகவும் அதில் இவ்வித வசதிகளும் இல்லை.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு முன், இந்த பஸ் தரிப்பிடத்தை உரிய வகையில் நிர்மாணித்து தருமாறும் பிரதேச வாசிகள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.



# சத்தியப்பிரமாணம்



நுவரெலியா பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமானின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான செயலாளரும், சமூக செயற்பாட்டாளருமான எம். இராஜாராம் அகில இலங்கை சமாதான நீதவானாக ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தின் நீதவான் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

பொகவந்தலாவை, மோராவை பிறப்பிடமாகக் கொண்ட எம்.இராஜாராம், தெரேசியா தமிழ் வித்தியாலயம், ஹொலிறோசரி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் தனது ஆரம்பக் கல்வியையும், நோர்வூட் மகா வித்தியாலயத்தில் உயர்தர கல்வியையும் நிறைவு செய்து கொண்டவராவார்.

மலையக சமூக, கலை, கலாசார, விளையாட்டுத் துறைகளில் மிகவும் ஈடுபாடு கொண்டு இளைஞர்களின் வாழ்க்கை தர உயர்வுக்குத் தன்னால் இயன்ற பங்களிப்பையும் வழங்கி வருகின்றார்.

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் பாராளுமன்ற விவகாரங்களுக்கான செயலாளராக 2012 முதல் 2019 வரை கடமையாற்றி உள்ளதுடன், ஜப்பான் சர்வதேச தொழில் மன்றத்தின் ஊடாக 2018ஆம் ஆண்டு ஜப்பானில் நடைப்பெற்ற தொழிற்சங்க கருத்தரங்கில் இ.தொ.காவை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



குமரித் தோட்டத்தில்

# வீடு எரிந்தது

செ.தி.பெருமாள்

சாமிமலை, ஸ்ரஸ்ப்பி தோட்ட குமரி பிரிவில் நேற்று (01) காலை 9 மணியளவில் லயக்குடியிருப்பு ஒன்றில் தீபரவல் ஏற்பட்டதுடன், இதன்போது ஒரு வீடு முற்றாக எரிந்துள்ளது.

24 வீடுகளைக் கொண்ட லயக்குடியிருப்பில் இத்தீபரவல் ஏற்பட்டதுடன், இத் தீபரவல் ஏனைய வீடுகளுக்கு பரவாமல் பிரதேசவாசிகளால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

தீபரவலால் பாதிக்கப்பட்ட7 பேரைக் கொண்ட குடும்பத்துக்கு தோட்ட நிர்வாகம் தற்காலிகமாக வீடொன்றை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இத் தீபரவல் ஏற்பட்ட போது, 3 சிறுவர்கள் மாத்திரமே வீட்டில் இருந்துள்ளதாகவும் அவர்களுக்கு இதன்போது எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என அயலிலுள்ளவர்கள் தெரிவிக்கின்றனர்.

# ஆலய கும்பாபிஷேகம்



ஆ.ரமேஸ்

கந்தப்பளை தேயிலை மலை தோட்ட அருள் மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய புனராவர்தன அஷ்டபந்தன குண்டபட்ஷ மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருவிழா நாளை (03) வெள்ளிக்கிழமை நடைபெற அம்பிகை திருவருள் கைகூடியுள்ளது.

இதனையொட்டி நேற்று (01) கிரியாகால நிகழ்வுகள் விநாயகர் வழிபாடுடன் ஆரம்பமாகின.

இன்று (02) விசேட பூஜைகளுடன் காலை 10 மணிமுதல் மாலை 05 மணிவரை சுவாமிகளுக்கு அடியார்கள் எண்ணை காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாளை (03) காலை காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகும் விசேட பூஜைகளுடன், காலை 10.20 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் வேதாகம வித்தியாபதி ஷாஹித்ய பாஸ்கரன், ஷப்தரிஷி குருபீடாதிபதி தேசமாண்ய சிவஸ்ரீ குமார விக்னேஸ்வர குருக்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதை தொடர்ந்து பகல் 12 மணியலவில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது.



## கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன



நடந்து முடிந்த க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற 125 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிகள், கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமாரின் ஏற்பாட்டில் அசீஸா பவுண்டேசன் ஊடாக, வழங்கப்பட்டன.

(எம். செல்வராஜா)



# மிருக வேட்டையில் ஈடுபட்ட இருவர் கைது

ராமு தனராஜா

மிருக வேட்டையில் ஈடுபட்ட பதுளை பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் பசறை பொலிஸாரால் நேற்று (01) மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்கொல்ல வனப்பகுதியில் மிருகங்களை வேட்டையாடுவதற்காக சென்ற 34, 41 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவர்களிடமிருந்து கைத்துப்பாக்கி, மிருகங்களுக்காக வைக்கப்படும் 'ஹக்கபட்டஸ்' என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களை பதுளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்தனர்.

# நால்வர் சித்தி




நடராஜா மலர்வேந்தன்

பதுளை, ரேந்தபல, பொரகஸ் ஸ்ரீ கணபதி இந்து கல்லூரியில் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் தோன்றிய நான்கு மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். அதற்கமைய, ஏ.எச்.தாகிப் 156 புள்ளிகளையும், ஏ.எச்.ஹிக்மா 150 புள்ளிகளையும் எஸ். கபிலாஷினி 149, எம்.எம்.எம்.சாதிர் 145 புள்ளிகளையும் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.



## தைப்பொங்கல் விழா

அரநாயக்க பிரதேச செயலகப் பிரிவின் கலாசார பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழா, அம்பதெனிய தோட்டக் கோவிலில் அண்மையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அரநாயக்க பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் ஏ.எம். பைசால் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

(என். ஆராச்சி)



சுதந்திரம் கிடைக்காத தமிழர்கள்

# சுதந்திர தினத்தை கொண்டாடத் தேவையில்லை

## பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரன்

கனகராசா சரவணன்

கடல் இல்லாத ஆப்கானிஸ்தான் நாட்டுக்கு கப்பல்துறை அமைச்சர் இருப்பது போல, சுதந்திரம் இல்லாத இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்துள்ளதாம். எனவே, பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ள கறுப்பு சுதந்திர தின கண்டன பேரணிக்கு ஐந்து கட்சிகளைக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழு ஆதரவு தெரிவிப்பதுடன் இந்தக் கண்டனப் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து கிளர்ந்தெழவேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரன் அழைப்புவிடுத்துள்ளார்.

மட்டக்களப்பு வாவிக்கரை வீதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (31) இடம்பெற்று ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை வருடாவருடம் சுதந்திர தினத்தை கொண்டாடிக் கொண்டு வருகின்றது. ஆனால், சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து இன்றுவரை தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவது மாத்திரம் அல்லாமல், தமிழர்கள் பிரதேசங்கள் கூட அபகரிக்கப்பட்டு வருகின்றன.

மாறிமாறி இந்த நாட்டை ஆண்ட ஆட்சியாளர்கள், இனக்கலவரங்கள் பலவற்றை உருவாக்கி தமிழ் மக்களை கொலை செய்தது மாத்திரம் அல்லாது அவர்களின் சொத்துகளையும் சூறையாடினர்.

சுதந்திர தினம் கொண்டாப்படும்போது சுதந்திரம் கிடைக்காத தமிழர்கள் ஆகிய நாங்கள், இந்தச் சுதந்திரததினத்தை கொண்டாட வேண்டிய தேவை இல்லை. அத்துடன் நான்காம் திகதி பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கு கிழக்கை இணைந்து, யாழில் இருந்து மட்டக்களப்பு வரை கண்டனப் பேரணி நடத்தவுள்ளது. அதற்கு ஐந்து கட்சிகள் இணைந்துள்ள தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முழு ஆதரவு வழங்கும் என்றார்.

# அம்பாறை மாவட்டத்தில் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஏ.எல்.எம் ஷினாஸ்

அம்பாறை மாவட்டத்தின் கரையோர பிரதேசங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதோடு, குளிரான வானிலை காரணமாக பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் பொத்துவில் தொடக்கம் பெரியநீலாவணை வரைக்குமான கரையோரப் பிரதேசங்களில் தொடர்ச்சியாக விட்டு விட்டு மழை பெய்து வருவதோடு, இப்பகுதியில் மாலை வேளையில் கடும் குளிரான காற்று வீசி வருகிறது. இதனால் இப்பகுதிகளில் வசிக்கும் முதியோர், சிறுவர்கள் அதிகளவில் சிரமங்களை எதிர்நோக்குவதுடன் பலர் சுவாச நோய்க்கும் உள்ளாவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மழை காரணமாக நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளதுடன் கூலித் தொழிலாளர்களும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரிக்கு பதில் பிரதம ஆணையாளர் விஜயம்

எம்.ஏ றமீஸ்



கல்வி அமைச்சின் ஆசிரிய கல்விப் பிரிவுக்குப் பொறுப்பான பதில் பிரதம ஆணையாளர் எச்.எச்.வி.எம் சஞ்சீவனி, அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

2019, 2020 ஆம் ஆண்டுகளில் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை, கல்விக் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுநர்களாக இணைத்துக் கொள்வதற்கான நேர்முகப்பரீட்சை, தற்போது கல்வியியல் கல்லூரிகளில் நடைபெற்று வருகின்றன. இதை அவதானிக்கும் பொருட்டு பதில் பிரதம ஆணையாளரின் இவ்விஜயம் அமைந்திருந்தது.

இதன்போது ஆசிரிய கல்வியியலாளர்களுக்கான விசேட கூட்டத்திலும் அவர் கலந்து கொண்டார். கல்லூரியின் பீடாதிபதி சட்டத்தரணி கி. புண்ணியமூர்த்தியின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது கல்வியற் கல்லூரியில் காணப்படும் குறைபாடுகளும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியல் கல்லூரில் காணப்படும் கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பிலான பிரச்சினை தொடர்பில், பதில் பிரதம ஆணையாளர் தலைமையிலன குழுவினரை, பீடாதிபதி நேரடியாக அழைத்துச் சென்று காண்பித்தபோது, இப்பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவண காப்பகம் தீ தொடர்பான

# வழக்கு விசாரணையை துரிதப்படுத்துமாறு உத்தரவு

எம்.எஸ்.எம் ஹனீபா

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவண காப்பகம் தீயிட்டு எரித்தமை தொடர்பான வழக்கு விசாரணையை முன்னெடுப்பதற்கு அம்பாறை மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஊடாக, குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணையை துரிதப்படுத்துமாறு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம் ஹம்ஸா நேற்று முன்தினம் (31) உத்தரவிட்டார்.

கடந்த டிசெம்பர் மாதம் புதன்கிழமை (21) அதிகாலை வேளையில், நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயால் நீதிமன்றின் வழக்கு பதிவேட்டு அறையிருந்த ஆவண கோப்புகள் முற்றாக எரிந்துள்ளன.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கு, விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்ட நிலையில் சந்தேகத்தின் பேரில் கோளாவில் பிரதேசத்தை சேர்ந்த 28, 24, 19 வயதுடைய மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீதிமன்ற ஆவண காப்பகம் தீயிட்டு எரித்தமை தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டள்ள சந்தேக நபர்கள் மூன்று பேரையும் நேற்று முன்தினம் (31) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம். ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மன்னாரில் சரிந்து விழுந்த காற்றாலை மின் கோபுரம்

மன்னார் நிருபர்



மன்னார் மாவட்டத்தில் மிக வேகமாக அமைக்கப்பட்டு வந்த காற்றாலை மின்சார கோபுரம், கட்டுமானப் பணியின் போது உடைந்து விழுந்துள்ளது.

நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட நறுவிலிக்குளம் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்டு வந்த கோபுரங்களில் ஒன்று கடந்த மாதம் உடைந்து விழுந்துள்ளது. அப்பகுதிக்கு விவசாயிகள், கால்நடைகள் மாத்திரம் சென்று வரும் பகுதி என்பதால் சம்பவம் வெளியில் தெரியாமல் இருந்துள்ளது.

அப்பகுதியில் செய்கை பண்ணப்பட்டிருக்கும் பயிர்களைப் பார்வையிடச் சென்ற போது, கோபுரம் சரிந்து கிடப்பதையும் கிரேன் வாகனம் சேதமாகி இருப்பதையும் அவதானிக்க முடிந்தது. குறித்த காற்றாலை கோபுரம் சரிந்து, கிரேன் மீது விழுந்த போதும், கிரைன் இயக்குநர் காயங்களுடன் உயிர் தப்பியுள்ளதாக அறிய முடிகிறது. ந்தச் சம்பவம் நடைபெற்றதில் இருந்து, அப்பகுதியில் காற்றாலை கோபுரங்கள் அமைக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு உள்ளது டன் இம் மாத இறுதியில் மீண்டும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாகவும் தெரிய வருகிறது.

நானாட்டான் பிரதேசத்தில் நறுவிலிக்குளம் முதல் அச்சங்குளம் வரை ஆறு காற்றாலை மின் கோபுரங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

அக்கராயன் – யாழ்ப்பாணத்துக்கான

# பஸ் சேவை வேண்டும்

நடராஜா கிருஸ்ணகுமார்



கிளிநொச்சி, அக்கராயனில் இருந்து முக்கொம்பன், பூநகரி வழியாக யாழ்ப்பாணத்துக்கான நேரடி பஸ் சேவையை நடத்துமாறு, அக்கராயன் பிரதேச மக்கள், இலங்கை போக்குவரத்து சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் முக்கொம்பன், பூநகரி வழியாக யாழ்ப்பாணத்துக்கு நடைபெற்ற இலங்கை போக்குவரத்து சபையின் ஒரேயொரு பஸ் சேவை கந்தபுரத்துக்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான மூன்று கிலோ மீற்றர் வீதியில் 15 இற்கு மேற்பட்ட குழிகள் காரணமாக, இடைநிறுத்தப்பட்டது.

தற்போது, அக்கராயன் பிரதேச மக்கள், கிளிநொச்சி நகரத்துக்குச் சென்றே யாழ்ப்பாணம் பயணிக்க வேண்டி உள்ளது. இதன் காரணமாக, வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், அக்கராயன்குளம், கந்தபுரம், கோணாவில், அமதிபுரம், ஆரோக்கியபுரம், கண்ணகைபுரம், முக்கொம்பன், சின்னப்பல்லவராயன்கட்டு, யூனியங்குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5,000 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் முக்கொம்பன் - பூநகரி வழியாக யாழ்ப்பாணம் செல்ல முடியாத நிலையில், நீண்ட நேரம் கிளிநொச்சிக்கு பயணம் செய்து, யாழ்ப்பாணம் செல்ல வேண்டி உள்ளது.

இரண்டு ஆண்டுகளில், மூன்று கிலோ மீற்றர் வீதியைப் புனரமைப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவோ கிளிநொச்சி மாவட்டச் செயலகமோ நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே, அக்கராயனில் இருந்து பூநகரி - முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்துக்கான நேரடி பஸ் சேவைகள் நடைபெறாமல் உள்ளன.

குறித்த வீதியைப் புனரமைத்து போக்குவரத்து சேவை நடத்துவதன் மூலம் முக்கொம்பன் மகா வித்தியாலயம், கண்ணகைபுரம் அ.த.க பாடசாலை, கந்தபுரம் இல.01, இல.02 பாடசாலைகள், அமதிபுரம், ஆரோக்கியபுரம் பாடசாலைகள், அக்கராயன் மகா வித்தியாலயம், அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம், யூனியங்குளம் பாடசாலை, கோணாவில் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் உட்பட கிராமங்களின் மக்கள் போக்குவரத்து நன்மையடைவார்கள். இதையும் விட மேற்படி கிராமங்களைச் சேர்ந்த மக்கள், அக்கராயன் பிரதேச வைத்தியசாலைக்கு இலகுவாகப் பயணிக்க முடியும்.

பருத்தித்துறையில் இருந்து தெய்வேந்திரமுனை வரை

# சைக்கிள் பயணம்

நிதர்சன் வினோத்



இலங்கையின் 75ஆவது ஆண்டு சுதந்திர தினத்தினை முன்னிட்டு, இலங்கை சைக்கிள் சம்மேளத்தால், பருத்தித்துறை முனையில் இருந்து தெய்வேந்திர முனை வரை சைக்கிள் பயணம், நேற்று முன்தினம் (31) பருத்தித்துறை சாக்கோட்டை பகுதியில் இருந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

எதிர்வரும் நான்கு நாள்களுக்கு குறித்த சைக்கிள் பயணம் தொடர்ந்து தெய்வேந்திர முனை பகுதியை சென்றடையவுள்ளது.

கேட்போர் கூடம் அமைக்க

# பழைய மாணவர்கள் உதவ வேண்டும்

நடராஜா கிருஸ்ணகுமார்



பாடசாலையின் நூற்றாண்டு விழா நெருங்கும் நிலையில், கேட்போர் கூடம் அமைப்பதற்கு பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்குங்கள் என முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளர் க. கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குமுழமுனை மகா வித்தியாலயத்தின் நுழைவாயில் கதவு திறப்பு விழாவில் நேற்று முன்தினம் (31) முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இப்பாடசாலையில் நுழைவாயில் கதவை அமைப்பதற்கு உதவிய கந்தசாமி பத்மநாதனை பாராட்டுகின்றேன். இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா நெருங்கும் நிலையில், இப்பாடசாலையில் கேட்போர் கூடத்தை அமைப்பதற்கு பழைய மாணவர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இதேவேளை, பாடசாலைக்கு கிடைக்கின்ற வளங்களையும் இருக்கின்ற வளங்களையும் பயன்படுத்தி கல்வியிலும் இணைப்பாட விதான செயற்பாடுகளிலும் மாணவர்கள் வெற்றிகரமாக செயற்பட வேண்டும். பெற்றோர்களினதும் பழைய மாணவர்களினதும் ஒத்துழைப்பு கிடைக்கின்ற பாடசாலைகளே, பெரும் முன்னேற்றங்களை கண்டு வருகின்றன எனவும் தெரிவித்தார்.

# சீரற்ற வானிலையால் விவசாயிகள் பாதிப்பு

மன்னார் நிருபர்

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் தொடர்சியாக மழையுடன் கூடிய வானிலை நிலவி வருகின்ற நிலையில், விவசாய செய்கையில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மழை காரணமாக அறுவடைக்கு தயாரான நிலையில் காணப்பட்ட நெற்பயிர்கள் சரிந்துள்ளதுடன் வயல் நிலங்களுக்குள் நீரும் அதிகளவு தேங்கியுள்ளது. அதேநேரம், அறுவடையின் பின்னர் வீதிகளில் உலர விடப்பட்டிருந்த பல தொன் நெல்லும் முற்றுமுழுதாக மழையில் நனைந்துள்ளன.

முன்னதாகவே பசளை, உரம், ஏரிபொருள் என அனைத்தினதும் விலையேற்றத்தின் மத்தியிலும் விவசாய செய்கையை மேற்கொண்ட விவசாயிகளிடம், அடிமாட்டு விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டு வரும் நிலையில், சீரற்ற வானிலை காரணமாக ஏழை விவசாயிகள் மேலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# வங்குரோத்து நாட்டின், சர்வதேசம் செல்லும் கொண்டாட்டம்

பொது மக்கள் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்த போதிலும், அரசர்கள் தாம் சகல வசதிகளையும் செல்வங்களையும் அனுபவித்தமை தொடர்பில், சரித்திரத்தில் பல இடங்களில் அறிந்து கொள்ள முடிகின்றது.

இன்று நாட்டில் நடந்தேறும் ஆட்சியிலும், இவ்வாறானதொரு போக்கையே அவதானிக்க முடிகின்றது. தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி பொறுப்பை ஏற்று பொதுமக்களுக்கு ஆற்றிய முதலாவது உரையின் போது, “எதிர்வரும் காலம் கடினமானதாக இருக்கும்; பொது மக்கள் தியாகங்களை மேற்கொள்ள வேண்டும்” எனக் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு அவர் குறிப்பிட்டதைப் போல, பொது மக்களும் பல இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருவதுடன், வரிக்கு மேல் வரியும் சுமத்தப்பட்டுள்ளது. அரச நிர்வாக செலவை எடுத்துக் கொண்டால், பொது மக்களின் வரியிலிருந்து அரச அதிகாரிகளுக்கு சம்பளம் மற்றும் கொடுப்பனவு மேற்கொள்ளும் நிலைமை நிலவுகின்றது.

ஜனவரி மாதத்தில் அரசின் வருமானம் 158 பில்லியன் ரூபாய்; சம்பளம், ஓய்வூதியம் அடங்கலாக செலவு 367 பில்லியன் ரூபாயாக பதிவாகியிருந்ததாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு நெருக்கடி நிறைந்த சூழலில், நாளை மறுதினம் கொண்டாடப்படவுள்ள நாட்டின் 75 ஆவது பவள விழா சுதந்திர தின நிகழ்வுகள் தொடர்பிலும் மக்கள் மத்தியில் விசனம் நிலவுகின்றது.

குறிப்பாக, நாட்டு மக்கள் உணவு, மருந்துப் பொருட்கள், எரிபொருள் பற்றாக்குறை, மின்சார கட்டண உயர்வு, அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு போன்ற பல்வேறு நெருக்கடிகளுடன், வரி அதிகரிப்பால் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வரும் நிலையில், உலகுக்கு எமது நாட்டின் சுதந்திர தினத்தை பறைசாற்றும் வகையில் கோலாகல கொண்டாட்டங்கள் அவசியம் தானா? உயர் தரப் பரீட்சை இடம்பெறும் காலப்பகுதியில் மின் உற்பத்திக்கு எரிபொருள் வழங்க முடியாத எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கும் அமைச்சுக்கும், இந்த் சுதந்திர தின பவனியில் பங்கேற்கும் படைக்கவச வாகனங்களுக்கு எங்கிருந்து எரிபொருள் கிடைக்கின்றது என்பதும் கேள்வியாக அமைந்துள்ளது.

இருளில் இருந்து, குப்பி விளக்கில் படித்தாலென்ன, நடை நடையாய் பரீட்சை எழுதச் சென்றால் என்ன, உண்ண உணவில்லாவிட்டால் என்ன, உலகம் பார்க்க வெகு விமரிசையாக சுதந்திர தினக் கொண்டாட்டம் இடம்பெற்றால் போதும் எனும் போக்கில், பொது மக்களின் சுதந்திரம் பிடுங்கப்பட்ட ஒரு சூழலில், இந்தக் கொண்டாட்டம் இடம்பெறுகின்றது.

இதை ஏற்பாடு செய்வோருக்கு முதுகெலும்பில்லை என்றால், அதில் பங்கேற்கும் நாட்டின் பாதுகாப்பு வீரர்களில் எத்தனை பேருக்கு, அரச தலைவர்களுக்கு தமது மரியாதையை செலுத்தும் உண்மையான உள உணர்வு இருக்கும் என்பதும் கேள்விக்குறியே.

சர்வதேசத்திடம் வங்குரோத்து நிலை பிரகடனம் செய்து அனுபவிக்கும் முதலாவது சுதந்திர தினத்தை, கண்டிப்பாக பிரம்மாண்டமாக கொண்டாடத்தான் வேண்டுமா?


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வெற்றிடமான இடத்திலும் கடவுள் இருக்கின்றார் என உணர்ந்தால், எந்தப் பாவங்களையும் எவரும் செய்யமாட்டார்கள். பிரபஞ்சங்களை உருவாக்கியதும் அதை நிர்வகிப்பதும் இறைவன் என்பதை உணர்க!

தவறு செய்தால் தப்பிக்கலாம் எனப் பலரும் நினைக்கலாம். எதையும் எப்படியும் செய்யலாம்; கேட்பது யார் எனச் சொல்லி, வீம்புபேசுபவர்களின் நிலை கூட, அடுத்த கணத்தில் மாறி விடலாம்; எவரும் மதிக்காத நபராகி விடலாம். மமதையுடன் வாழ முடியாது.

தூய எண்ணங்களே மேன்மையான வாழ்க்கைக்கு நிரந்தரமாகின்றன. “நிரந்தரமற்ற வாழக்கை” எனச் சொல்லிக்கொண்டு பிடிப்பின்றி இயங்கலாகாது.

வாழும் காலம் பவித்திரமானது என நம்புங்கள். ஒவ்வொரு கணமும் முக்கியமானது. காலத்தை மதித்து செய்யவேண்டிய நல்லவற்றை, சந்தோசத்துடன் செய்வதே எமது வாழ்வுக்குப் பெருமையானது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# சுமந்திரனை வளர்க்கும் புதிய கூட்டணி


புருஜோத்தமன் தங்கமயில்




தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்குள் எம்.ஏ சுமந்திரன் நுழைந்தது முதல், கூட்டமைப்பை பிளவுபடுத்தும் சதித்திட்டங்களில் ‘ஆமை’ போன்று ஈடுபட்டதாக, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி (ஜ.த.தே.கூ - DTNA)) குற்றஞ்சாட்டுகின்றது.

கடந்த பொதுத் தேர்தல் காலத்திலும், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ‘சுமந்திரன்’ என்ற பெயர் பிரதான பேசு பொருளானது. “ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை” என்று சுமந்திரன், சிங்கள இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வி, அவரை பலமாகப் பதம் பார்த்தது. அவரது கட்சியின் சக வேட்பாளர்களே, அவரைத் தோற்கடிக்க வேண்டும் என்று வெளிப்படையாகப் பேசினார்கள்.

இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் சுமந்திரனின் பெயர்தான் பிரதான பேசு பொருளாகி இருக்கின்றது. “கூட்டமைப்பை பிளவுபடுத்திய ஆமை”, “தமிழரசு கட்சியை கைப்பற்றப்போகும் சதிகாரன்” என்றெல்லாம், ஜ.த.தே.கூட்டணியினர் மேடைக்கு மேடை பேசி வருகிறார்கள்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தனித்து போட்டியிடுவது என்று, இலங்கை தமிழரசுக் கட்சியின் மத்திய குழு முடிவெடுத்தது. அதனை, கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுமந்திரன் அறிவித்தார். தமிழரசுக் கட்சியின் சார்பில், அந்தக் கூட்டத்தில் மாவை சேனாதிராஜாவும் சுமந்திரனும் கலந்து கொண்டிருந்தார்கள்.

எனினும், தனித்துப் போட்டியிடுவது என்ற தமிழரசுக் கட்சியின் தீர்மானம் சுமந்திரனால் எடுக்கப்பட்டது என்பது மாதிரியாக உணர்நிலையை, ஏனைய இரு பங்காளிக் கட்சிகளான டெலோவும் புளொட்டும் முன்னிறுத்தின. அதனால்தான், சுமந்திரனின் பெயர் இந்தத் தேர்தல் மேடைகளிலும் தொடர்ந்து உச்சரிக்கப்படுவதற்கு காரணமாகி இருக்கின்றது.

பங்காளிக் கட்சிகளை இணைத்துக் கொண்டு, தொடர்ந்தும் கூட்டமைப்பாக வீட்டுச் சின்னத்தில், தமிழரசுக் கட்சி போட்டியிட வேண்டும் என்று மாவை சேனாதிராஜா மத்திய குழுக் கூட்டத்தில் வலியுறுத்தினர். அவருக்கு ஆதரவாக ஒரு சிலர் மாத்திரமே பேசினார்கள்.

ஆனால், மத்திய குழுவில் இருந்த 90 சதவீதமான உறுப்பினர்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்கிற முடிவில் உறுதியாக இருந்தார்கள். தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை அறிவிக்க முதலே, கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்கள் விண்ணப்பிக்கலாம் என்று சிவஞானம் சிறிதரன் பத்திரிகை அறிவித்தல்களை வெளியிட்டிருந்தார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், கிளிநொச்சியிலுள்ள மூன்று சபைகளில் பங்காளிக் கட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களை சிறிதரன் வழங்கி இருக்கவில்லை. அவர், ஒட்டுமொத்தமாகத் தமிழரசுக் கட்சி உறுப்பினர்களை கொண்டே நிரப்பியிருந்தார். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில், சிறிதரன் செய்தது மாதிரியான ஏற்பாடுகளை, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தமிழரசுக் கட்சியின் முடிவுகளை எடுக்கும் தலைவர்கள் எடுத்துவிட்டார்கள்.

அவ்வாறான நிலையில், பங்காளிக் கட்சிகளோடு இடங்களைப் பங்கிடுவது என்பது, தங்களது ஆதரவாளர்களை கோபப்படுத்தும் என்பது அவர்களுக்கு தெரியும். அதனால்தான், மத்திய குழு, மாவையின் உணர்ச்சிகரமான உரையை புறந்தள்ளிக் கொண்டு, தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்தது.

அத்தோடு, கடந்த பொதுத் தேர்தல் தொடக்கம், தமிழரசுக் கட்சியை பங்காளிக் கட்சிகள் அலைக்கழித்து வருவதான எண்ணம், அந்தக் கட்சியினருக்கு உண்டு. அதனை, சி.வி.கே சிவஞானம் போன்றவர்கள் ஊடகங்களிலும் வெளிப்படுத்தவும் செய்தார்கள்.

தங்களது வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வென்றுவிட்டு, தங்களை ஏறி மிதிக்கும் செயற்பாட்டை ஏற்க முடியாது என்பது தமிழரசுக் கட்சியினரின் நிலைப்பாடு. அதனை, கட்டுப்படுத்துவதற்கு வீட்டுச் சின்னம் இல்லாமல் டெலோவும் புளொட்டும் போட்டியிட்டு, தங்களது உண்மையான நிலையை உணர்ந்து கொள்ளட்டும் என்பது தமிழரசின் எண்ணம்.

அதுபோல, தமிழரசுக் கட்சியினருக்கு கூட்டமைப்பாக நிலைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் பெரிதாக இல்லை. பங்காளிக் கட்சிகளின் தொல்லைகள் அற்ற, தனிக் கட்சியாக முன்னேறுவதே இலக்கு. அதற்கு, ஏதாவது காரணத்தை முன்வைத்து, பங்காளிகளை வெட்டிவிட்டாக வேண்டும். அதற்கு, தற்போதுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முறையிலுள்ள குழப்பத்தை கையிலெடுத்துக் கொண்டு, கூட்டமைப்பின் பங்காளிகள் அனைவரும் தனித்துத் தனித்து போட்டியிட்டுவிட்டு, தேர்தலின் பின்னர் சேர்ந்து ஆட்சி அமைப்பது என்ற ‘காதில் பூச்சுற்றும்’ தொழில்நுட்ப விடயத்தை கையிலெடுத்தது.

தேர்தல் களத்தில் தனித்து தனித்து போட்டியிட்டால், கட்சி ரீதியாக பலமாக மோத வேண்டி ஏற்படும். அது, இன்னும் இன்னும் பிளவுகளை ஏற்படுத்தும். அதனால், எதிர்காலத்தில் கூட்டாக சேர்வது தடுக்கப்படும் என்பது வெளிப்படையான விடயம்.

தமிழரசு தனித்துப் போட்டியிடும் முடிவை, மேற்கண்ட காரணங்களுக்காகத்தான் எடுத்தது. இது, அனைவருக்கும் தெரியும். குறிப்பாக, ஆயுதப் போராட்டம், தேர்தல் அரசியல் களம் என்று 50 ஆண்டுகளாக இயங்கிக் கொண்டிருக்கும் செல்வம் அடைக்கலநாதனுக்கும் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் தமிழரசின் நோக்கம் தெரியாதது இல்லை. அதனால்தான், அவர்கள் இருவரும் தமிழரசு தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்ததும், கூட்டமைப்பை தமிழ்த் தேசிய பரப்பிலுள்ள ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொண்டு, பொதுச் சின்னத்தின் கீழ் பதிவு செய்ய வேண்டும் என்று இரா.சம்பந்தனுக்கு கடிதம் எழுதினார்கள்.

இதன்மூலம், கூட்டமைப்பு என்கிற அடையாளத்தை தமிழரசு தன்னோடு எடுத்துச் செல்வதைத் தடுக்க முடியும் என்று நினைத்தார்கள். ஏனெனில், கடந்த 20 ஆண்டுகளாக கூட்டமைப்பு என்பது வீட்டுச் சின்னத்தோடு இயங்கியது. இன்றைக்கு தமிழரசு தனித்துப் போட்டியிட முடிவெடுத்ததும், வீட்டுச் சின்னத்தையும் எடுத்துச் சென்றுவிட்டது. அப்படியான நிலையில், கூட்டமைப்பு என்கிற அடையாளத்தையாவது தாங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது.

ஆனால், தமிழரசின் தனித்துப் போட்டியிடும் முடிவு என்பது, கடந்த பொதுத் தேர்தலின் பின்னரே எடுக்கப்பட்ட முடிவு ஆகும். அதனை, பங்காளிக் கட்சிகள் உணராமல் விட்டதுதான், இப்போது இறுதி நேரத்தில் இவ்வாறான சிக்கல்களைச் சந்தித்து, புதிய கூட்டணியான ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற பெயரோடு வரக் காரணமாகி இருக்கின்றது.

இதனை மறைப்பதற்காக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு என்ற ‘லேபிளை’ ஒட்ட செல்வமும் சித்தார்த்தனும் முயன்றாலும் அது, அவ்வளவு இலகுவான ஒன்றல்ல.

தமிழரசுக் கட்சி கடந்த பொதுத் தேர்தலில் சந்தித்த பின்னடைவை, பங்காளிக் கட்சிகள் பயன்படுத்திக் கொள்ள முயன்றன. கூட்டமைப்புக்குள் கடந்த காலத்தில் தமிழரசு செலுத்திய ஏகபோக நிலையைத் தடுப்பதற்கு நினைத்தன. அதற்காக, கூட்டமைப்புக்கு வெளியிலுள்ள கட்சிகளோடு பலமான நெருக்கத்தையும் பேணின. அதன் மூலம் தமிழரசை மிரட்டலாம் என்பது அவர்களின் நிலைப்பாடு.

ஆனால், டெலோவும் புளொட்டும் இவ்வாறான நடவடிக்கைககளால் தமிழரசின் தனித்துப் போட்டியிடும் முடிவை, கட்சிக்குள் பலமாக உறுதிப்படுத்துவதற்கே உதவின. மாறாக, தாங்கள் பலமான அணியாக எழுவது குறித்து சிந்திக்க மறந்துவிட்டன.

அதுதான், தேர்தலொன்று வரும் வரையில், அமைதியாக இருந்துவிட்டு, இறுதி நேரத்தில் தமிழரசுக் கட்சி மத்திய குழுவைக் கூட்டி, தனித்துப் போட்டியிடும் முடிவை எடுத்தது. டெலோவும் புளொட்டும் தமிழரசின் தனித்துப் போட்டியிடும் எண்ணத்தை மாவை உள்ளிட்டவர்களைக் கொண்டு தடுத்துவிடலாம் என்று முயற்சிகளை மேற்கொண்டன. ஆனால், இன்றைக்கு மாவையைத் தாண்டி முடிவுகளை சுமந்திரன், சிறீதரன் உள்ளிட்ட தரப்பினர் தமிழரசுக் கட்சிக்குள் எடுக்கும் நிலை வந்துவிட்டது.

அப்படியான நிலையில்தான் டெலோவும் புளொட்டும் பலமான கூட்டணியைக் கட்ட முடியாமல், தேர்தல் மேடைகள் தோறும் சுமந்திரனை வசைபாடும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் தனித்துப் போட்டியிடும் முடிவை, ஆறு மாதங்களுக்கு முன்னரேயே உணர்ந்து கொண்டிருந்தாலே, இன்னும் பலமான கூட்டணியைக் கட்டியிக்கலாம். இறுதி நேரத்தில், அவசர அவசரமாக ஒரு கூட்டணியை அமைக்க வேண்டி வந்திருக்காது. அமைக்கும் போதே புதிய கூட்டணி, நம்பிக்கையீனங்களின் வழியாக எழுந்திருக்கின்றது.

வெற்றிபெறுவோம் என்ற எண்ணம் செல்வத்திடமும் சித்தார்த்தனிடமும் இல்லை. அதனால்தான், கூட்டமைப்பின் பிளவு சுமந்திரனால் நிகழ்ந்தது என்றும், அவரை ஆமை என்றும் தூற்றுகிறார்கள்.

சுமந்திரன் சர்ச்சைகள், விமர்சனங்கள் வழியாக, தான் அடையாளப்படுத்தப்படுவது குறித்த கவலை கொள்ளும் நபர் அல்ல. அவர், மக்களிடம் கவனம் பெற வேண்டுமானால், அவையெல்லாம் ஒருவகையிலான உத்திகள் என்று கருதுபவர்.

இன்றைக்கு சுமந்திரன், தமிழ்த் தேசிய அரசியல் பரப்புக்குள் அடைந்திருக்கின்ற இடம், அவரின் செயற்பாட்டு அரசியலால் மாத்திரமல்ல, எதிர்த்தரப்பினரின் விமர்சனங்கள் வசைகளினூடும் நிகழ்ந்தது. இன்றைக்கும், சுமந்திரனுக்கு உதவும் வேலையைத்தான் புதிய கூட்டணியினரும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

சுமந்திரனை மறந்துவிட்டு, தங்களின் அரசியல் இலக்கு, அதனை அடைவதற்கான வழிமுறைகள் பற்றி மக்களை தெளிவுபடுத்தினால், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் மேல் எழ முடியும். இல்லையென்றால், வயிற்றெரிச்சலை கொட்டித்தீர்க்கும் களமாக மாத்திரமே தேர்தல் களத்தை, புதிய கூட்டணியினர் பயன்படுத்தியதாக வரலாறு பதிவு செய்யும்!

## கடிதங்கள்

பாலைப்பாணி கிராமத்தை

### வறுமையில் இருந்து மீட்குமாறு கோரிக்கை

பாலைப்பாணி கிராமத்துக்கான பிரதான வீதி, கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக புனரமைக்கப்படாமை, போக்குவரத்து வசதியின்மை, தொழில் வாய்ப்பின்மை என்பவற்றால், இப்பிரதேசத்தில் வாழ்ந்து வரும் 67 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளன.



முல்லைத்தீவு மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக காணப்படும் பாலைப்பாணி கிராமத்தில், கடந்த காலங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வந்த நிலையில், யுத்தம் காரணமாக அதிகளவான மக்கள் இடம்பெயர்ந்து, தமிழகத்துக்கு சென்றனர்.

யுத்தத்தின் பின்னரான மீள்குடியமர்வை அடுத்து, மேற்படி கிராமத்தில் 67 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீள்குடியேறி, 12 ஆண்டுகளாகிய நிலையிலும் மேற்படி கிராமத்துக்கான பிரதான வீதியாக காணப்படும் வன்னிவிளாங்கும் - மூன்றுமுறிப்பு வீதி, இதுவரை புனரமைக்கப்படாமல் காணப்படுவதுடன், மழைக்காலங்களில் மக்கள் பயணிக்க முடியாத நிலையிலும் காணப்படுகின்றது.

இதைவிட, குறித்த கிராமத்தில் தினமும் காட்டு யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுகிறது. பாலப்பாணி கிராமத்தில் இருந்து வன்னிவிளாங்குளம், மாங்குளம் உள்ளிட்ட பாடசாலைகளுக்கு தினமும் ஒன்பது கிலோ மீற்றர் தூரம் காட்டுப் பாதை ஊடாக பாடசாலைகளுக்கு செல்லும் மாணவர்கள், யானைகளின் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதாகவும் கிராமமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிராமத்தில் வாழும் அனைத்து குடும்பங்களும் எந்தவித தொழில் வாய்ப்புகளும் இன்றியிருப்பதால், வறுமை நிலையில் வாழ்ந்து வருகின்றன என்றும் மேற்படி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

– யது பாஸ்கரன்

சென்னை

# பிரபல யூடியூப் சேனல்கள் மீது சரத்குமார் புகார்



“இரண்டு பிரபல யூடியூப் சேனல்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரி” நடிகரும்,சமத்துவ மக்கள் கட்சியின் தலைவருமான சரத்குமார், சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார்.

குறித்த புகாரில்“சில தினங்களாக இரண்டு யூடியூப் சேனல்களில், என்னைப் பற்றியும், எனது குடும்பத்தினரைப் பற்றியும், கலைத் துறையினரைப் பற்றியும் தவறாக சித்தரித்து, இழிவுபடுத்தும் வகையில் வீடியோக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

உண்மைக்கு புறம்பான செய்திகளே, தவறான நோக்கத்தில் தொடர்ந்து இவ்வாறு பதிவிடப்பட்டு வருகின்றன.

எனது புகழுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும், தனிப்பட்ட முறையில் தேவையற்ற மன உளைச்சலுக்கு எம்மை ஆளாக்கும், இத்தகைய இழிவான செயலில் ஈடுபட்ட நபர் யாராக இருந்தாலும் கண்டறிந்து அவர்கள் மீது தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுபோன்ற யூடியூப் சேனல்களை முடக்க வேண்டும்” இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

கேரளா

## பிரபல பாடகி ‘லலிதா’ காலமானார்



பம்பாய் சகோதரிகளில்‘ ஒருவரான பிரபல பாடகி சி.லலிதா.

உடல் நலக்குறைவு காரணமாக நேற்று முன்தினம்(31) உயிரிழந்துள்ளார்.

கேரள மாநிலம், திருச்சூரில் பிறந்தவர்கள் சகோதரிகளான சி.சரோஜா மற்றும் சி.லலிதா. பிரபல கர்நாடக இசை கலைஞரும், பாடகர் ஹரிஹரனின் தந்தையுமான ஹெச்.ஏ.எஸ். மணியிடம் கர்நாடக இசையைப் பயின்ற இவர்கள், பல இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பிரபலமடைந்தனர்.

இதன் காரணமாக இவர்களை ‘பம்பாய் சகோதரிகள்’ என ரசிகர்கள் அன்புடன் அழைத்து வந்தனர்.

அந்தவகையில் இவர்கள் இருவரும் இணைந்து கடந்த 50 ஆண்டுகளாகப் பல மொழிகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளனர் .

மேலும் இவர்களின் இசைப் பணிக்காக மத்திய அரசின் பத்மஸ்ரீ, தமிழக அரசின் கலைமாமணி உள்ளிட்ட பல்வேறு விருதுகளையும் பெற்றுள்ளனர்.

இந்நிலையில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வந்த லலிதா, நேற்று முன்தினம்சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உத்தரபிரதேசம்

## கணவரின் அடங்காத ஆசை; ஆத்திரத்தில் அசிட் ஊற்றிய மனைவி

மதுபோதையில் இருந்த கணவரின் முகத்தில், மனைவி அசிட் வீசிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரபிரதேசம்,கான்பூரைச் சேர்ந்தவர் குப்தா. 40 வயதான இவர் மதுப் பழக்கத்திற்கு அடிமையானவர் எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் கடந்த 28 ஆம் திகதி குப்தா மது அருந்திவிட்டு வீட்டுக்குத் தாமதமாக வந்துள்ளார் எனவும், இதனால் அவருக்கும் அவரது மனைவிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாக்குவாதம் முற்றிய நிலையில், ஆத்திரமடைந்த மனைவி வீட்டில் இருந்த அசிட்டினை எடுத்து குப்தாவின் முகத்தில் வீசியுள்ளார்.

உக்ரேன்

# ஒலிம்பிக்கில் பங்கேற்க ரஷ்யாவுக்குத் தடை?



நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா கடந்த 11 மாதங்களாக உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.


அதே சமயம் உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப்போரில் இருதரப்பில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அண்மையில் உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கி (Volodymyr Zelenskyy) வரும் 2024 ஆம் ஆண்டு பாரிசில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் ரஷ்ய வீரர்கள் பங்கேற்க தடைவிதிக்க வேண்டும் என பிரான்ஸ் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

அதே சமயம் “ரஷ்ய மற்றும் பெலாரஸ் விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக்கில் நடுநிலையாளர்களாகப் பங்கேற்கலாம்” என சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பு கூறியிருந்தது.

இந்நிலையில் இவ் விவகாரம் குறித்து பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மேக்ரானுக்கு உக்ரேன் ஜனாதிபதி எழுதிய கடிதத்தில், சர்வதேச ஒலிம்பிக் கூட்டமைப்பின் தீர்மானத்திற்கு தான் எதிர்ப்பு தெரிவிப்பதாகவும், ரஷ்ய விளையாட்டு வீரர்களை போட்டியிட அனுமதித்தால்,உக்ரேன் ஒலிம்பிக் போட்டியை புறக்கணிப்பதாகவும்” குறிப்பிட்டுள்ளார்.

ஈரான்



## நடனமாடிய ஜோடிக்கு 10 ஆண்டுகள் சிறை

ஈரானில் பொது இடங்களில் மக்கள் நடனமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டின் தலைநகரான தெஹ்ரானில் உள்ள நினைவுச் சின்னமான ஆசாதி கோபுரம் முன்பாக, இருவர் நடனமாடி ,சமூக வலைதளத்தில் பதிவிட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இதனைத்தொடர்ந்து விதிகளை மீறி நடனமாடியமைக்காக இருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

இந்நிலையில் இருவருக்கும் தலா 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா



## கட்டுக்கட்டாக ஊழியர்களுக்கு போனஸ் கொடுத்த நிறுவனம்

அண்மைக்காலமாக வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உலகின் முன்னணி நிறுவனங்களான டுவிட்டர், மெட்டா, அமேசான், கூகுல் உள்ளிட்ட பல நிறுவனங்கள் தங்களது ஊழியர்களைப் பணிநீக்கம் செய்து வருகின்றன.

இந்நிலையில் சீனாவைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று ஊழியர்களுக்கு கட்டுக்கட்டாக போனஸ் தொகையை வழங்கியுள்ள சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஹெனான் மாகாணத்தில் இயங்கிவரும் `ஹெனன் மைன்` என்ற குறித்த நிறுவனத்தில் 5,000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

கொரோனாத் தொற்றுப் பரவல் காரணமாக சீனாவின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ள நிலையிலும், ஹெனன் மைன் நிறுவனத்தின் மொத்த வருவாய் 9.16 பில்லியன் யுவானாக அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் அண்மையில் அந்நிறுவனமானது பணத்தை மலை போல குவித்து வைத்து ஊழியர்களுக்கு ஊக்கத்தொகையைக் கட்டுக்கட்டாக வழங்கியுள்ளது.

இது குறித்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



### கோப்பா இத்தாலியா தொடர்:

# அரையிறுதிப் போட்டியில் இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கோப்பா இத்தாலியா தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு நடப்புச் சம்பியன்களான இன்டர் மிலன் தகுதி பெற்றுள்ளது.

தமது மைதானத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அத்லாண்டாவுடனான விலகல் முறையிலான இத்தொடரின் காலிறுதிப் போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் வென்றே அரையிறுதிப் போட்டிக்கு மிலன் தகுதி பெற்றுள்ளது.




### தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய 2005ஆம் உயர்தர மாணவர்களில்

## கலைப்பிரிவை வென்ற வர்த்தகப் பிரிவினர்

பி.கேதீஸ்

தலவாக்கலை தமிழ் மகா வித்தியால தேசிய பாடசாலையின் 44ஆவது அகவையை முன்னிட்டு பாடசாலையில் கல்விக் கற்ற 2005 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர கலைப் பிரிவு மாணவர்களுடனான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் வர்த்தகப் பிரிவினர் வென்றனர்.




### 107 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு

## என்ஸோ பெர்ணாண்டஸைக் கைச்சாத்திட இணங்கிய செல்சி

இங்கிலாந்துக் கால்பந்தாட்டக் கழகமொன்றால் கைச்சாத்திடப்பட்ட அதிக தொகையாக, போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவின் மத்தியகளவீரரான 22 வயதான என்ஸோ பெர்ணாண்டஸை 107 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களுக்கு கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சி இணங்கியுள்ளது.

இதற்கு முன்னதாக கடந்த 2021ஆம் ஆண்டில் ஜக் கிரெலிஷுக்காக 100 மில்லியன் ஸ்டேர்லிங் பவுண்ஸ்களை இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி செலுத்தியதே சாதனையாகவிருந்தது.



## செல்சியிலிருந்து ஆர்சனலுக்கு சென்ற ஜோர்ஜினோ

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான செல்சியின் மத்தியகளவீரரான ஜோர்ஜினோவை, இன்னொரு பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் கைச்சாத்திட்டுள்ளது.

ஆர்சனலுடன் ஒன்றரை ஆண்டுகள் ஒப்பந்தத்தை 31 வயதான ஜோர்ஜினோ கைச்சாத்திட்டுள்ளார். செல்சியில் இறுதி ஆறு மாத ஒப்பந்தத்தில் ஜோர்ஜினோ காணப்பட்டிருந்தார்.

## பங்களாதேஷின் பயிற்றுவிப்பாளராக மீண்டும் சந்திக ஹத்துருசிங்க



பங்களாதேஷ் ஆண்கள் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக சந்திக ஹத்துருசிங்க மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இரண்டாண்டு ஒப்பந்தத்திலேயே ஹத்துருசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

பங்களாதேஷின் இருபதுக்கு -20 அணிக்கு ஸ்ரீதரன் ஸ்ரீராம் பொறுப்பாகவுள்ள நிலையில், எவ்வகையான போட்டிகளுக்கு ஹத்துருசிங்க பொறுப்பாக இருப்பார் என்பது தெளிவில்லாமல் உள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 02 பெப்ரவரி 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.